


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், உலக சிக்கன நாள் விழா நாகர்கோவில், கோட்டார் டி.வி.டி. மேல்நிலைப்பள்ளியில் இன்று (31.10.2016) நடைபெற்றது.

செ.வெ.எண்: 770/2016 நாள்: 31.10.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன் சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் சிறு சேமிப்புத்துறை வாயிலாக உலக சிக்கன நாளை முன்னிட்டு நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை இன்று (31.10.2016) வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் சிறு சேமிப்புத்துறை வாயிலாக உலக சிக்கன நாளை முன்னிட்டு நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை, நாகர்கோவில், கோட்டார் டி.வி.டி. மேல்நிலைப்பள்ளியில் இன்று (31.10.2016) வழங்கி தெரிவித்ததாவது:-.

உலக சிக்கன நாள் ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் 30-ம் தேதி அன்று இந்தியா முழுவதும் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்களிடையே சிக்கன உணர்வை ஏற்படுத்தி சேமிக்கும் பழக்கத்தை வளர்க்கும் நோக்கத்தில் சிறுசேமிப்பு துறையின் வாயிலாக பல்வேறு சேமிப்பு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே சேமிக்கும் பழக்கத்தினை ஏற்படுத்த அவர்கள் பெயரில் தபால் நிலையங்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட சிறுசேமிப்பு முகவர்கள் மூலம் கணக்கினை தொடங்கி சிறு தொகையினை செலுத்தி வந்தால் 25 அல்லது 30 வருடங்களுக்கு பின்பு வட்டியுடன் மிக பெரிய தொகையாக கிடைக்க பெறும் வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். அதன் மூலம் அவர்களின் உயர் கல்விக்காகவும், பெற்றோர்களின் முதியோர் காலத்தில் மருத்துவ சேவைக்கும் மற்றும் பெண்களின் திருமணத்திற்கு இத்தொகைகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

எனவே பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் பெயரில் கண்டிப்பாக சேமிப்பு கணக்கை தொடங்கி குறைந்த பட்சமாக ரூ.1000/- மாதந்தோறும் செலுத்தி சிறு வயதிலேயே சேமிக்கும் பழக்கத்தினை ஏற்படுத்தி, அவர்கள் வாழ்வில் ஒளியேற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டார்.

அதனை தொடர்ந்து உலக சிக்கன நாள் விழாவை முன்னிட்டு, பள்ளி மாணவ, மாணவியர்களிடையே சிக்கனம் மற்றும் சேமிப்பு பண்பினை வளர்த்திடும் வகையில், நடைபெற்ற பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, நாடக போட்டி மற்றும் நடன போட்டிகளில் வெற்றிபெற்ற 21 மாணவ, மாணவியர்களுக்கு முதல் பரிசும், 21 மாணவ, மாணவியர்களுக்கு இரண்டாம் பரிசும், 18 மாணவ, மாணவியர்களுக்கு மூன்றாம் பரிசும் என மொத்தம் 35 பள்ளிகளை சார்ந்த 60 மாணவ, மாணவியர்களுக்கு நினைவு பரிசுகளும், பாராட்டு சான்றிதழ்களும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் இன்று (31.10.2016) வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. வெ. ஜெயக்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சிறு சேமிப்பு) திரு. ச. பாலசுப்பிரமணியன், முதுநிலை அஞ்சலக கண்காணிப்பாளர் திரு. ப. பாண்டியராஜ், பள்ளி தலைமையாசிரியர் திரு. கே.ஆர். சிதம்பரதாணு, பள்ளி செயலர் திரு. வே.நாகராஜன், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. காந்தியம்மாள், பள்ளி ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.